R4790

# THE BIBLE IN STONE
# “கல்லில் வேதாகமம்”

“அக்காலத்தில் எகிப்து தேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடமும், அதின் எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமும் உண்டாயிருக்கும். அது எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும்.” – ஏசாயா 19:19,20

நமது முன்னோர்களை விட நாம் புத்திசாலிகள் என்று நினைப்பது ஒரு தவறாக இருக்கிறது. நாம் நீராவி சக்தி, மின்சார விளக்கு, தந்தி, தொலைபேசி, ஒலிப்பதிவு கருவி முதலானவைகளின் காலத்தில் நாம் வாழ்வதால் நாம் நமது முன்னோர்களை விட நாம் புத்திசாலிகள் என்று சிலர் யூகிக்கிறார்கள். உண்மையைச் சொல்வோமேயானால் நம்மில் மிகவும் சொற்பமானவர்கள் மட்டுமே நமக்கு பிரயோஜனமானவைகளை கண்டுபிடித்திருக்கிறார்கள். பெரிய கண்டுபிடிப்பாளர்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக பரவியிருக்கிறார்கள். திடீரென வந்த உள்ளுணர்வினால்தான் தாங்கள் புதிய கண்டுபிடிப்புகளில் வெற்றி கண்டோம் என்று அவர்கள் நமக்கு கூறுகிறார்கள். அவர்கள் அதற்காக திட்டமிடாமல் கண்டுபிடிப்புகளின் மேல் இடறினார்கள்.

மேலும் நமது கண்டுபிடிப்புகள் எல்லாம் பலரின் சிந்தனைகளாக இருக்கிறது. ஒருவரது கருத்து இன்னொருவருக்கு மூல கருத்தாக இருக்கிறது. அச்சு இயந்திரம், தபால் சேவை சத்திய அறிவை உலகெங்கிலும் பகிர்ந்து கொள்ளுவதற்கு மூலகாரணங்களாக இருக்கின்றன. ஒருவருடைய கருத்து இன்னொருவருக்கு பயனுள்ளதாக இருக்கிறது. நாம் தேவனுடைய ஆயத்தப்படுத்தும் நாளில் இருப்பதால் இந்த காலத்தின் முன்னேற்றத்தை வேதாகமம் நமக்கு விளக்குகிறது. மேசியாவின் ராஜ்யத்திற்காகவும் பிறகு வரக்கூடிய உலகலாவிய ஆசீர்வாதத்திற்காகவும் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.

## நமது இனம் சீராக அழிந்து கொண்டிருக்கிறது என்பதை புள்ளி விவரங்கள் காண்பிக்கின்றன

உண்மையைச் சொல்வோமானால் மிகவும் முன்னேறிய நாடுகள் சீராக அழிந்து கொண்டிருக்கின்றன என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. மகா பிரிட்டனின் தொப்பி உற்பத்தியாளர்கள் சமீப காலத்தில் கொடுத்த அறிவிப்பின்படி சிறிய தொப்பிகளுக்கு கிராக்கி அதிகரித்தும் பெரிய தொப்பிகளுக்கு தேவை குறைந்து கொண்டும் வருகிறது. இது கடந்த வருடங்களின் பதிவின்படி காண்பிக்கப்படுகிறது. வேதாகம போதனைக்கு எதிராக இருக்கும் பரிணாம வளர்ச்சியின் பலன் என்ற எண்ணத்தைக் கொடுப்பதற்கு உதவி செய்திருக்கிறது. கொஞ்ச காலத்திற்கு முன்னர் நமது முன்னோர்கள் எல்லாம் குரங்குக்கு ஒத்த ஒரு வகுப்பாராக இருந்தனர் என்பது அதன் கொள்கையாக இருக்கிறது.

உண்மைகள் எவை? கவிஞர்களை நாம் தேடினோமானால், அவர்களை எங்கே காண்போம்? “புத்திசாலித்தனம் நிறைந்த யுகம்” என்று அழைக்கப்படுகிற இந்த காலத்தில் ஷேக்ஸ்பியருக்கு சரிசமான கவிஞர்கள் இருக்கிறார்களா? அல்லது சங்கீதக்காரன் அல்லது யோபுக்கு ஒப்பான கவிஞரைக் காணமுடிகிறதா? பரிணாம கொள்கைப்படி, 3500 வருடங்களுக்கு முன் வாழ்ந்த நம்முடைய முன்னோர் ஒரு அறிவுள்ள வாலில்லா குரங்காகத்தான் இருந்திருக்க வேண்டும். இன்னும் கூட மோசேயின் நியாயப்பிரமாணத்தை வாசித்து அவரது நுண்ணறிவு, நீதி, ஞானம் மற்றும் பெருந்தன்மையை யார் தான் சிந்திக்காமல் இருக்கக்கூடும்? நம்முடைய நாகரீக காலத்தில் மோசேயின் சில நியமங்களை எடுத்துக்கொண்டால் நலமாயிருக்கும். உதாரணத்திற்கு யூபிலி வருடம், இதில் சகல சொத்துக்களும் ஆதி சொந்தக்காரருக்கு போய்ச்சேரும்.

## மகா பிரமிட் முன்னோர்களின் அறிவுத்திறனுக்கான சான்றுகளில் ஒன்று

எகிப்தின் மகா பிரமிட் நமது முன்னோர்களின் அறிவுத்திறனுக்கான சான்றுகளில் ஒன்றாக இருக்கிறது. பரிணாம கொள்கையின்படி நமது முன்னோர்கள் படிப்பறிவில்லாத குரங்குகளாகத்தான் இருந்திருக்க வேண்டும். இந்த காலத்தில் நவீன இயந்திரங்களைக் கொண்டு மகா பிரமிடைப் போல வேறு ஒன்றை, கல்லுகளுக்கு இடையே இடைவெளி இல்லாமல் கட்ட முடியும். சிந்திக்கக்கூடிய ஒவ்வொருவரும் மகா பிரமிடின் கட்டுமானத்தை ஆராய்ந்து, அதை கட்டியவர்கள் எவ்வளவு நுட்பத்துடன் கட்டியிருக்கிறார்கள் என்பதை அறிந்து ஆச்சரியப்படுவார்கள். அவ்வளவு நுட்பத்துடன் நமது காலத்திற்கு முன்பு கட்டுவது இயலாத காரியமாக இருந்திருக்கும்.

எனினும் மகா பிரமிட் பரிணமாக கொள்கைக்கு எதிரான இன்னொரு சான்றாக இருக்கிறது. நமது வாசகர்கள் வேதாகம பாடங்களில் மூன்றாவது தொகுதியில் கடைசி அத்தியாயத்தை படித்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதன் கட்டுமானத்தில் ஆச்சரியமான நிழலான போதனைகள் காண்பிக்கப்பட்டுள்ளன. பிரமிடானது வேதாகமத்தின் போதனைக்கு இசைவாக இருக்கிறது. உண்மையிலேயே சிலர் இந்த பாடத்தை தொகுதி மூன்றில் படித்தப்பிறகு, பிரமிட், “கல்லில் வேதாகமம்” என்று குறிப்பிடுகிறார்கள்.